

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.2.2025) சென்னையில், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் உறுப்பினர் பியாரிலால் ஜெயின் அவர்களின் மகள் ஸ்ருதி – ராகுல்ஜி ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் இனிகோ இருதயராஜ், இரா. மூர்த்தி, தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவர் பீட்டர் அல்போன்ஸ் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



ராமேஸ்வரம் மீனவர்களின் கோரிக்கையை ஏற்று உடனடியாக ரூ.360 கோடியில் நலத்திட்டங்களை அறிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார்.

## பல்வேறு சமூக நலத்திட்டங்களை நிறைவேற்றி

# 2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் இலக்கை அடைய தமிழ்நாடு அரசு முனைப்பு!

## பொருளாதார ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, பிப்.22-**

**தமிழ்நாட்டில் பல்வேறு சமூக நலத்திட்டங்களை நிறைவேற்றி 2030-ஆம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் இலக்கை அடைய மாநில அரசு முனைப்புடன் செயல்படுகிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**முதலமைச்சர்மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (20.2.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:-**

நம்முடைய அரசின் அடுத்த நிதிநிலை அறிக்கை வரும் மார்ச் 14ஆம் நாள் தாக்கல் செய்யப்பட இருக்கும் நிலையில், இந்த முக்கியமான பொருளாதார ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துக்கொண்டு உங்கள் எல்லோரையும் வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த மூன்று ஆண்டுகளாக, அரசின் பொருளாதாரக் கொள்கைகளையும், முன்னோடி நலத்திட்டங்களையும் வடிவமைத்துச் செயல்படுத்துவதில் பல்வேறு ஆலோசனைகளை வழங்கியதற்காக உங்கள் எல்லோருக்கும் நன்றி!

இந்தப் பொருளாதார ஆலோசனைக் குழுவின் கடந்த கூட்டங்களில், அனைவருக்கும் பயன் அளிக்கத்தக்க வளர்ச்சியை தமிழ்நாட்டில் நிலைபெறச் செய்யத் தேவையான பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னீர்கள். அதன் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டுள்ள பல்வேறு திட்டங்கள், மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றிருக்கிறது!

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!**

தமிழ்நாட்டில் ஒரு கோடியே 14 இலட்சத்து 59 ஆயிரம் தகுதி வாய்ந்த குடும்பத் தலைவிகள் அனைவருக்கும், மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகையை வழங்கி, பெண்களுக்கு அதிகாரத்தையும், பொருளாதார உரிமையையும் வழங்கியிருக்கும் "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்" வெளிப்படையான மற்றும் தரவுகளின் அடிப்படையிலான பயனாளிகள் தேர்வு முறை எல்லோராலும் பாராட்டப்பட்டிருக்கிறது!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (20.2.2025) தலைமைச் செயலகத்தில், முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது. இக்கூட்டத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், குழுவின் உறுப்பினர்கள் பேராசிரியர் எஸ்தர் டஃப்லோ, பேராசிரியர் ரகுராம் ராஜன், டாக்டர் அரவிந்த் சுப்ரமணியன், பேராசிரியர் ழான் த்ரேஸ், டாக்டர் எஸ். நாராயண், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரசுப் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை பயின்று தேர்ச்சி பெற்ற மாணவிகளுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் "புதுமைப் பெண்" திட்டத்தால், இடைநிற்றல் குறைந்து, மாணவிகளின் உயர் கல்வி சேர்க்கை உயர்ந்திருக்கிறது!

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு தொழில் துறை சார்ந்த வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்குத் தேவையான திறன்களை வழங்கியுள்ள "நான் முதல்வன்" திட்டம், சுமார் 2 இலட்சத்து 60 ஆயிரம் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுத் தந்திருக்கிறது. இந்திய அளவில் மற்ற மாநிலங்களுக்கும் முன்னோடியாக தமிழ்நாடு திகழ்ந்து வருகிறது.

**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்!**

அடுத்ததாக, 17 இலட்சத்து 53 ஆயிரம் மாணவர்களுக்குப் பயன் அளிக்கும் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்", மாணவர்களின் வருகையையும், ஊட்டச்சத்து நிலையையும், கற்றல் திறனையும் மேம்படுத்தியிருக்கிறது.

நான் ஏற்கெனவே இங்கு பலமுறை சொன்னதுபோன்று, "விடியல் பயணத் திட்டம்" பெண்களின் பணிச்சூழல் பங்களிப்பை மேம்படுத்தி, அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வித்திட்டிருக்கிறது.

மருத்துவத் துறையில் செயல்படுத்தப்பட்டிருக்கும் "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டமும், பள்ளிக் கல்வித் துறையில் செயல்படுத்தப்படும் "இல்லம் தேடி கல்வி" திட்டமும், தேசிய அளவில் மட்டுமல்லாமல், சர்வதேச அளவிலும் பாராட்டுக்களை பெற்றிருக்கிறது.

**கடந்த 4 ஆண்டுகளில் 40 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு!**

இப்படி பல்வேறு சமூகநலத் திட்டங்களை நிறைவேற்றி வரும் அதே வேளையில், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் வேகப்படுத்தி, 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாடு ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை அடைய வேண்டும் என்று முனைப்போடு செயல்பட்டு வருகிறோம். கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் 40 இலட்சம் பேர் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள்.

பல ஆண்டு காலமாக, தமிழ்நாட்டில் சிறந்து விளங்கும் மோட்டார் வாகன உற்பத்தி, ஜவுளி உற்பத்தி, தோல்பொருட்கள் உற்பத்தி போன்ற துறைகள் மட்டுமல்லாமல், தோல் அல்லாத காலணி உற்பத்தி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறைப் பொருட்கள் உற்பத்தி, உலகளாவிய திறன் மையங்கள் ஆகியவற்றை புதிய வளர்ச்சித் துறைகளாக முன்னிறுத்தி, இந்தத் துறைகளிலும், இந்திய அளவில் அதிக முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம். இப்படிப்பட்ட தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு கட்டமைப்புத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறோம்.

நான் முன்பே சொன்னது போன்று, நலத்திட்டங்களையும் கட்டமைப்பு மேம்படுத்துதலையும் ஒரே நேரத்தில் செய்வதற்குத் தேவையான ஆதாரங்களை நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம்.

**16வது நிதிக் குழுவிடம் கோரிக்கை மனு!**

அண்மையில், தமிழ்நாடு போன்ற வளர்ச்சியடைந்த மாநிலங்களின் நிதிப்பகிர்வு குறித்த நமது நியாயமான கோரிக்கைகளை முன்னிறுத்தி, ஒன்றிய அரசின் 16ஆவது நிதிக் குழுவிடம் கோரிக்கை மனுவை அளித்தோம். ஒரு முற்போக்கான அணுகுமுறையை இந்த நிதி ஆணையம் கடைபிடிக்கும் என்று எதிர்நோக்கியுள்ளோம்.

மாநில அரசுகளின் நிதி நிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஓய்வூதியத் திட்டத்தில், ஒன்றிய அரசு கொண்டு வந்திருக்கும் மாற்றங்களையும் ஆய்வு செய்துக்கொண்டு இருக்கிறோம். இத்தகைய சூழலில், தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை அடுத்தகட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கான உங்களின் பரிந்துரைகளையும், ஆலோசனைகளையும் நான் எதிர்நோக்கியுள்ளேன்.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் இந்த அரசு எடுத்த பல்வேறு முன்முயற்சிகளின் பயன்களை நிலைக்கச் செய்யவும், வரும் ஆண்டுகளில் நம் மக்களின் எதிர்காலத்தை மேலும் வளம்மிக்கதாக மாற்றவும், தேவையான பயனுள்ள ஆலோசனைகளை நீங்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சியில் நீங்கள் எல்லோரும் செலுத்தி வரும் ஈடுபாட்டுக்கு மீண்டும் ஒருமுறை எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## தமிழ்நாட்டையும் – தமிழ்நாட்டு மாணவர்களின் எதிர்காலத்தையும் சிதைக்கும் – ஒன்றிய கல்வி அமைச்சர்

# தர்மேந்திர பிரதானின் சென்னை வருகையைக் கண்டித்து கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை அறிவிப்பு!

*சென்னை, பிப்.22-*

ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு எதிராக கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வப்பெருந்தகை அறிவித்துள்ளார்.

இது குறித்து செல்வப் பெருந்தகைகூறியதாவது:

கல்வியை யார் அரசியல் ஆக்குகிறார்கள்?. இருமொழி கொள்கையில் கல்வியை படித்தவர்கள் ஏற்கனவே உள்ள சமச்சீர் கல்வி முறையில் படித்தவர்கள் தான் இன்று உலகம் முழுவதும் வல்லுநர்களாகவும், உலகம் போற்றக்கூடிய விஞ்ஞானிகளாகவும், தொழில் அதிபர்களாகவும் வழக்கறிஞர்களாகவும், பொறியாளர்களாகவும் இருக்கின்றனர். என்ன பிரச்சினை இவர்களுக்கு? ஆர்.எஸ்.எஸ். கொள்கை, சித்தாத்தம் என்ன சொல்கிறதோ? அதை திணிக்க வேண்டும் என்று முயற்சி செய்கின்றனர். ஒரு போதும் அதை தமிழ்நாடு அனுமதிக்காது, தமிழக மக்களும் அனுமதிக்க மாட்டார்கள்.

தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் மும்மொழிக் கொள்கையை ஒருபோதும் அனுமதிக்க மாட்டார். இந்தத் தலைமுறைக்கு மட்டுமல்ல, அடுத்த தலைமுறைக்கும் வழிகாட்டுகின்ற முதல்வராக இன்றைக்கு அவர் திகழ்ந்து கொண்டிருக்கிறார். ஒன்றிய கல்வி அமைச்சரின் இந்தச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். இதை கைவிட வேண்டும்.



பா.ஜ.க.வைத் தவிர தமிழகத்தில் யாரும் இந்தத் திட்டத்தை ஆதரிக்கவில்லை. இன்னும் கூட அவர்களுக்கு நெருக்கமாக இருந்த அ.தி.மு.க. கூட இந்தத் திட்டத்தைப் புறக்கணிக்கிறது. அப்படி என்றால் தமிழ்நாட்டு மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்கள் யார்? எதிரானவர்கள் யார்? என்பதை இது காட்டுகிறது.

மும்மொழிக் கொள்கையும், புதிய கல்வி கொள்கையும் தமிழக மக்களுக்கு ஒவ்வாது. ஒரு போதும் அதை ஏற்றுக் கொள்ள மாட்டோம். முதல்வர் எடுக்கும் எல்லா முயற்சிக்கும் காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சிகள் உறுதியாக இருப்போம். ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் சென்னை ஐஐடிக்கு வரும் போது காங்கிரஸ் சார்பில் அவருக்கு எதிராக கருப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்த திட்ட மிட்டுள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

**தர்மேந்திர பிரதானை முற்றுகையிடுவோம்!**

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தனது டிவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

"மும்மொழிக் கொள்கையை ஏற்றால் தான் நிதி தருவோம் என்றும் தமிழகத்துக்கு வழங்கப்பட வேண்டிய ரூ.2152 கோடியை இன்று வரை ஒதுக்காமலும், தமிழகத்தையும், தமிழக மாணவர்கள் எதிர்காலத்தையும் சிதைக்கும், ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களின் சென்னை வருகையை கண்டித்து வருகிற 28ம்தேதி முற்றுகை மற்றும் கருப்புக் கொடி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் நடைபெறும்" - என்று அவர் கூறியுள்ளார்.

---

# தாய்மொழிகளைக் காப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

**முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு;**

**'சூழும் பகைதனில் இருந்து தாய்மொழிகளைக் காப்போம்! தமிழே அறம்! தமிழே அரண்!'**

**இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.**

---

## மதுரையில் — சிறுகதை மன்னர்

# எஸ்.எஸ்.தென்னரசு 97வது பிறந்த நாள்!

## திருவுருவப் படத்திற்கு – என்.எம்.மாரி தலைமையில் மாலை அணிவிப்பு!

*மதுரை, பிப். 22 -*

அய்யன் திருவள்ளுவர் இலக்கிய மன்றம் சார்பில் "சிறுகதை மன்னர்" எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் 97 ஆவது பிறந்த நாளினை முன்னிட்டு, 20.02.2025 காலை 10 மணி அளவில் மதுரை வடக்கு மாசி வீதி மணியம்மை மழலையர் பள்ளியில் மன்றத் தலைவர் என்.எம்.மாரி தலைமையில் "சிறுகதை மன்னர்" எஸ்.எஸ்.தென்னரசு அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டது.

நிகழ்வில் இலக்கிய மன்றப் புரவலர் அரிமா மகா.



கணேசன், செயலாளர் கே.வி.இராமகிருட்டினன், துணைச் செயலாளர்கள் கரு.ஆறுமுகம், லெ.முருகேசன், துணைத் தலைவர்கள் டி.வி. அழகர், ச. செல்வக்குமரன், செயற்குழு உறுப்பினர்கள் லெ. வெள்ளைச்சாமி, ரெ. கார்த்திகேயன், சீ. வரதராசன்,

சிறப்பு அழைப்பாளர்கள் புரட்சிப் பாவலர் மன்றத் தலைவர் " பெரியார் நெறியாளர் " பி. வரதராசன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் இராம.வைரமுத்து, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட அமைப்பாளர் க.அ. உஸ்மான் அலி, மாமன்ற மேனாள் உறுப்பினர் கா.ரா.முருகேசன். வி.கண்ணன், திருமதி ரஜினி அமுது ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.